# In the Court of the District Munsif, Eraniel

**Original Suit No. 51/2014** **Date:13.08.2025**

**(PW1)- தேவ ஞான ஜோஸ்**

**4,5,6** பிரதிவாதிகள் தரப்பு **குறுக்கு விசாரணை**

**1.** 2025 ம் வருடம் வழக்கு A பட்டிகை சொத்திற்கு அருகே உள்ள இடத்தை கிரயம் வாங்கினேன் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தின் ஆவண எண் என்ன என்றால் 608 ஆகும். என்னிடம் காட்டப்படும் ஆவணம் மேற்படி கிரய பத்திரம் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் **பிவாசாஆ . 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ஆவணத்தில் எல்கைகளாக வடக்கே பாதையும், கிழக்கே நாளது தேதியில் விலை வாங்கும் ஜோசையனின் விலை மனை என்றும், தெற்கே எனது வீடும் , மேற்கே தேவராஜன் மனை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

**2.** செல்லையன் நாடார் உயிலை எழுதிய போது நல்ல மனநிலையில் ஆரோக்கியத்துடன் இருந்தார்என்பதை காட்ட நான் ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் உயில் சாசனத்தில் அதை குறிப்பிட்டுள்ளார். செல்லையன் நாடாரும் அவரது வகையாரும் ஏற்படுத்திய பாக ஆவணத்தில் மேற்படி ஆவணத்தின் அசல் செல்லையன் நாடார் கைவசம் இருப்பதாக குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் சரிதான். மற்ற பாகஸ்தர்களுக்கு மேற்படி ஆவணத்தின் நகல் மட்டும் கொடுக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

**3.** நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் B பட்டிகை சொத்து பிரதிவாதிகளுக்கு உரிமைப்பட்ட இடம் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான், வழிப்பாதையும் B பட்டிகை சொத்தில் தான் உள்ளது. நான் இந்த வழக்கை B பட்டிகை சொத்து எனக்கு உரிமைப்பட்டது என்று விளம்புகை செய்ய தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். B பட்டிகை சொத்து , செல்லையன் நாடார் வகையறாக்கு தான் பாத்தியப்பட்டது என்றாலும் எனக்கு அதில்

உரிமையில்லையென்றாலும் சரியல்ல, நான் செல்லையன் நாடாரின் வளர்ப்பு மகன் ஆவேன், அவர் உயில் மூலம் எனக்கு பாத்தியப்படுத்தியுள்ளார்.

**4.**ஆவணம் மற்றும் அனுபவத்தின் மூலம் B பட்டிகை சொத்தில் எனக்கு எந்த உரிமையுமில்லையென்றால் சரியல்ல. B பட்டிகை சொத்து பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றாலும் நான் கோரியுள்ள 2வது பரிகாரம் எனக்கு கிடைக்ககூடியதல்ல என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கை தாக்கல் செய்யும் போது வழிப்பாதை 3 அடி என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல, 4 அடி என்று குறிப்பிட்டுள்ளேன் . வழக்கு தாக்கல் செய்த பின்பு 4 அடி வழிப்பாதை என்று மாற்றியுள்ளேன் என்றால் சரியல்ல. 23.04.2014 அன்று நான் கொடுத்த புகாரில் வழிப்பாதை அளவை குறிப்பிடவில்லையென்றால் சரியல்ல.

**5.** வாசாஆ. 1 ஆவணத்தில் செல்லையன் நாடார் கையொப்பம் உள்ளது என்றால் சரியல்ல. வாசாஆ. 2 ஆவணத்தில் செல்லையன் நாடார் கையொப்பம் செய்யவில்லையென்றால் சரியல்ல, பெருவிரல் அடையாளம் உள்ளது. உயில் பத்திரத்தில் 4வது பக்கத்தில் செல்லையன் நாடாரின் கையொப்பமோ கைரேகையோ உள்ளதா என்றால் இல்லை. செல்லையன் நாடார் எனக்கு எழுதி கொடுத்த வாசாஆ 2 ஆவணம் போலியானது என்றாலும் அதனால் தான் கையொப்பமில்லையென்றாலும் சரியல்ல. நான்கூறுவது போல் பிரதிவாதிகள் எனக்கு எந்த இடையூறும் செய்யவில்லையன்றாலும் அவர்களது சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

**6.** A பட்டிகை சொத்திற்கு வடக்கு பக்கம் 15 அடி பாதை இருந்தும், நான் அதை மறைத்து இந்த வழக்கை பிரதிவாதிகளை கஷ்டப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணம் போலியானது என்றாலும் எனது வழக்கு நிலைக்கத்தக்கது என்றாலும் பிரதிவாதிகள் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றாலும்

சரியல்ல. நான் வழக்கில் குறிப்பிட்டுள்ளபடி எந்த மதில் சுவரும் கட்டப்படவில்லையென்றால் சரியல்ல, 4ம் பிரதிவாதி படிக்கட்டு கட்டியுள்ளார்.

(8,10 பிரதிவாதிகள் மேற்படி குறுக்கு விசாரணையை adopt செய்கிறார்கள். )

( ஒப்பம் )

மாவட்ட உரிமையியல் நீதிபதி

இரணியல்